ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1937/23 - 2015 ඔක්තෝබර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.10.22

*1937/23 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் காத்தான்குடி கழிவுநீர் மீள்சுழற்சிக் கருத்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஒற்றோபர் 14.
5/2/1/ 1142

**அட்டவணை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் இல. 167B, புதிய காத்தான்குடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் புதிய காத்தான்குடி கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள மும்புமர்டு எனும் பெயரில் அமைந்த மொத்த அளவில் இருந்து 330 பேர்ச்சஸ் வரையான பின்வரும் எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : நீர் வழி ;
கிழக்கு : கடல்;
தெற்கு : 78767 ஆம் இலக்க காணி ;
மேற்கு : 78765 ஆம் இலக்க காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: வைத்தியர் எம். எம். ஏ. அலீம்,
இல. 18, சீ. சீ. எச். மாவத்தை,
காத்தான்குடி.

11- 145

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் காத்தான்குடி கழிவுநீர் மீள்சுழற்சிக் கருத்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு மேலதிக காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஒற்றோபர் 14.
5/2/1/1144

**அட்டவணை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் இல. 167B, புதிய காத்தான்குடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் புதிய காத்தான்குடி கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள மும்புமர்டு எனும் பெயரில் அமைந்த மொத்த அளவில் இருந்து 480 பேர்ச்சஸ் வரையான பின்வரும் எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : அப்துல் மஜீட் உரிமைகொண்டாடும் காணி ;
கிழக்கு : மொஹமட் அப்துல் லதீப் உரிமை கொண்டாடும் காணி ;
தெற்கு : தனியார் வீதி ;
மேற்கு : பதுருன்னிஷா மற்றும் ஜெசிலா உரிமை கொண்டாடும் காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: எம். ஐ. எம். உவாயீஸ்,
இல. 41, வைத்தியர் அப்துல் ஃபரீட் மாவத்தை,
காத்தான்குடி.

11- 146

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.